DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 196/2024 |
| Deposition of Witness for | : | P.W. 4 |
| Name | : | **கருணாகரன்** |
| Father's Name | : | கிட்டு |
| Village | : | கடையாத்துபட்டி |
| Taluk | : | அறந்தாங்கி |
| Calling | : | **பைனான்ஸ்** |
| Religion | : | **இந்து** |
| Age | : | 36/2025 |

**(வழக்கின் எதிரி ஆஜர். )**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 03.02.2025

**முதல் விசாரணை:**

நான் தற்போது அறந்தாங்கி தாலுகாவில் கடையாத்துப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். பைனான்சில் வேலை பார்த்து வருகிறேன். வழக்கின் ஆஜர் எதிரியை தெரியாது. அ.சா.1 வித்யா என்பவரை தெரியும் எனது நண்பர் கணேசன் என்பவரின் மனைவி. நானும் கணேசன் என்பவரும் சிங்கப்பூரில் ஒன்றாக வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1 வித்யா என்பவரின் வீடு தேவகோட்டை ராம்நகர் 5 வது தெருவில் குடியிருந்து வருகிறார். 25.01.2022 ம் தேதியன்று காலை 6.30 மணிக்கு கணேசன் என்பவர் போன் மூலமாக தேவ கோட்டை ராம்நகரில் உள்ள தனது வீடு எரிந்துகொண்டிருப்பதாகவும் நான் காலை சுமார் 7.00 மணியளவில் அ.சா.1 ன்

வீட்டிற்கு சென்றபோது வீடு முழுவதும் எரிந்து கிடந்தது. வழக்கு சம்மந்தமாக அ.சா.1 காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். அன்றைய தினமே போலிசார் இந்த வழக்கின் சம்பவயிடமான அ.சா.1ன் வீட்டை காலை 10.00 மணியளவில் வந்தார்கள். சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். நானும் ரமேஷ் என்பவரும் கையொப்பம் செய்தோம். பார்வை மகஜரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான். பார்வை மகஜர் **அ.தசா.ஆ.2** ஆகும். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர். சாட்சி ரமேஷ் தற்போது சிங்கப்பூரில் வேலை பார்த்து வருகிறார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

எனது ஊர் புதுக்கோட்டை மாவட்டம் ஆகும். எனது ஊருக்கும் சம்பவம் நடந்த இடத்திற்கும் சுமார் 35 கி.மீ தூரம் இருக்கும். நான் வெளிநாட்டில் வேலை செய்து வருகிறேன். வெளிநாட்டில் வேலை செய்த விபரத்தை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். நான் பாஸ்போர்ட்டை போலிசாரிடம் காண்பிக்கவில்லை. நானும் அ.சா.1ன் கணவரும் சேர்ந்து வேலை செய்து வருகிறோம். சம்பவம் நடைபெற்றதாக சொல்லும் இடத்திற்கு அருகில் அக்கம்பக்கத்தில் வீடுகளும் பொதுமக்களும் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். அக்கம்பக்கத்தில் ஆட்கள் எப்போதும் இருப்பார்கள் என்றால் சரிதான். நான் காவல்நிலையம் சென்றேன். அங்கு வைத்து வரைபடத்தில் நான் கையொப்பம் செய்யவில்லை. சம்பம் நடந்த அன்று நான் வெளிநாட்டில் இருந்தேன் என்றும் இந்த விசயத்தை என் பாஸ்போட்டை பார்த்தால் தெரியும் அது வழக்கிற்கு விரோதமாக இருந்ததால் அது மறைக்கப்பட்டு அ.சா.1 ன் கணவருடன் வேலை பார்ப்பதால் பொய்

சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் அனைத்து ஆவணங்களும் வைத்து தயாரிக்கப்பட்ட ஆவணங்களில் கையொப்பம் செய்து வழக்கிற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை:** இல்லை

A PASUMPON SHANMUGAIAH
Digitally signed by A PASUMPON SHANMUGAIAH
Date: 2025.02.03 06:42:53 +0000

Chief Judicial Magistrate,
Sivagangai.